# முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 219/2021

## Witness PW 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில் | |
| த/பெ | சுப்பராயன் | வயது | |
| ஊர் | | தேதி | 19.08.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (19.08.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**சத்தியமாக சொல்கிறேன்**

பிரமான வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது . பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது . இந்த வழக்கில் நான் வம்சாவழி பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . கோவிந்தம்மாள் என்பவர் 12.06.2013 தேதியில் இறந்துவிட்டதாக எனது வழக்குரையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரி . கோவிந்தம்மாள் என்பவரது கணவர் மற்றும் பிள்ளைகள் பெயரை அதில் சொல்லவில்லை என்றால் சரி . 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் கோவிந்தன் மற்றும் சரசு ஆகியோர்களுக்கு பிறந்தவர்கள் என்றால் சரி . சுப்பராயன் என்பவருக்கு கோவிந்தம்மாள் மற்றும் கோவிந்தன் ஆகோியர் தான் வாரிசுகள் என்றாலும் நான் வாரிசு இல்லை என்று சொன்னாலும் சரியல்ல . சுப்பராயன் என்பவருக்கு முதல் மனைவி சௌபாக்கியம்மாள் என்றால் இல்லை .சௌபாக்கியம்மாள் என்பவருக்கு பவுன்

என்ற பெண் குழந்தை பிறந்து இறந்துவிட்டது என்றால் அது எனக்கு தெரியாது . அதன் பிறகு தான் சுப்பராயன் என்பவர் கண்ணம்மாள் என்பவரை 2 வது மனைவியாக திருமணம் செய்து கொண்டார் என்றால் சரி . சுப்ராயன் மற்றும் கண்ணமாள் ஆகியோருக்கு பிறந்தவர்ககள் கோவிந்தன் மற்றும் கோவிந்தம்மாள் என்றால் இல்லை . ஆனால் வழக்குரையில் சொல்லியுள்ள வம்சாவழி பட்டியலில் சுப்பராயன் மற்றும் கண்ணம்மாள் ஆகியோருக்கு பிறந்தவர்கள் கோவிந்தன் மற்றும் கோவிந்தாம்மாள் என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரி . சுப்பராயன் என்பவர் 20.01.1963 ம் தேதி இறந்தார் என்றால் இல்லை. நான் எனது வழக்குரையில் 10.05.1977 ம் தேதி சுப்பராயன் என்பவர் இறந்ததாக சொல்லியுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல .சுப்பராயன் என்பவர் இறந்த பிறகு கண்ணம்மாள் என்பவர் சிறுவள்ளிக்குப்பத்தை சேர்ந்த ஆதிமூல கவுண்டர் மகனான குலசேகரன் என்பவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல . மேற்படி குலசேகரனை என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . சுப்பராயன் என்பவரது இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . சுப்பராயன் என்பவரது தகப்பனார் பெயர் கோவிந்தன் . தாயார் பெயர் எனக்கு தெரியாது . வா.சா.ஆ 1 ஐ விக்கிரவாண்டி தாலுக்கா அலுவலகத்தில் வாங்கினேன். கண்ணம்மாள் எந்த தேதியில் இறந்தார் என்பது தெரியாது . எத்தனை வருடத்திற்கு முன்பு இறந்தார் என்பதையும் என்னால் சொல்லமுடியாது . வா.சாஆ 2 யை விக்கிரவாண்டி தாலுக்கா அலுவலகத்தில் வாங்கினேன் . கோவிந்தம்மாள் என்பவர் எனக்கு ஏதேனும் ஆவணம் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை . கோவிந்தம்மாள் என்பவர் பிரதிவாதிகள் பெயரில் ஏதேனும் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் அது எனக்கு தெரியாது . கோவிந்தம்மாள் என்பவரது வாரிசு தாரர்களை எனக்கு நேரடியாக தெரியும் . அவர்களுடன்

எனக்குபேச்சு வார்த்தை உள்ளதா என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு இல்லை . கோவிந்தம்மாள் வாரிசுகளான துரை மற்றும் குமார் , கீதா ஆகியோருடன் பேச்சு வார்த்தை இருந்தது. கோவிந்தம்மாள் என்பவர் சுப்பராயன் என்பவரது மகள் என்பதை நான் தாக்கல் செய்த வம்சாவளி பட்டியல் வாயிலாக ஒப்புக்கொள்கின்றேன் என்றால் சரி . அவர்கள் இறந்துவிட்டதால் அவரது வாரிசுதாரர்களை சேர்க்க இன்று வரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால்ச ரி. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் கோவிந்தம்மாள் என்பவரது கணவர் தண்டபாணி , மகன்கள் துரை மற்றும் குமார் , மகள் கீதா என்று சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரி . அவர்களை வழக்கில் சேர்க்க வேண்டும் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அவர்கள் இந்த வழக்கிற்கு தேவையில்லை என்பதால் சேர்க்கவில்லை . அவர்கள் வேண்டாம் என்று எழுதி கொடுத்துவிட்டார்கள் ஆனால் எனது பெயரில் எதுவும் எழுதி கொடுக்கவில்லை . எந்த தேதியில் யாருக்கு என்ன ஆவணம் எழுதி கொடுத்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் 1980 ம்வருடம் கோவிந்தம்மாள் பஞ்சாயத்து வைத்து கோவிந்தன் என்பவரிடம் ரூ . 1500 பணத்தை பெற்று கொண்டு எழுதி கொடுத்துவிட்டார் . அதனை கோவிந்தன் எடுத்து சென்று அவரது பெயரில் பதிவு செய்துகொண்டார் . மேற்சொன்ன சங்கதி எனக்கு வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரிய வந்தது . மேற்சொன்ன விவரத்தை வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. நான் வம்சாவளி பட்டியலில் சொல்லியுள்ளது போல் சுப்பராயன் மற்றும் கண்ணம்மாள் என்பவருக்கு பிறந்தவர்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 மகேஷ் என்பவரது திருமண பத்திரிக்கை . வா.சா.ஆ 6 ஆவணத்தை இந்த வழக்கிற்காக நான் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை . வா.சாஆ 7 ரமேஷ் என்பவரது புதுமனை புகுவிழா அழைப்பிதழ் அதனையும் இந்த வழக்கிற்காக நான்

தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை . மேற்சொன்ன விவரங்களை வழக்குதாக்கல் செய்த சமயத்தில் சொல்லவில்லை என்றால் சரி முதன் முதலில் 28.04.2022 தாக்கல் செய்தேன் என்றால் சரி அவர்கள் இல்லை என்று சொன்னதால் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ 8 இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னிட்டு ஆவணம் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி . மேற்சொன்ன ஆவணத்தை இந்த வழக்கிற்காக நான் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை . நத்தம் பட்டா வா.சா.ஆ 9 இந்த வழக்கிற்குரிய ஆவணமா என்றால் ஆமாம். அது எவ்வளவு இடம் என்று எனக்கு தெரியாது. நத்தம் பட்டாவிற்கு நான்கு பக்க எல்லைகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதில் வீடு இருந்தத . நான் 4 வருடத்திற்கு முன்பு பார்த்த போது அங்கு வீடு இருந்தது. வழக்கு தாக்கல் செய்யும்போது அங்கு வீடு இருந்தது . அது யார் கட்டிய வீடு என்றால் நாங்கள் பொதுவில் கட்டிய வீடு . தற்பொழுது அ்ங்கு வீடு உள்ளதா என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் அங்கு செல்வதில்லை . உரிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதி குடும்பத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லாமல் இந்த வழக்ககை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் கேட்பது போல் வழக்கு சொத்தில் எனக்கு பாகம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக குறுக்கு விசாரணை சாட்சியம் ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram